தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

இன்று ஓசூரில் உரையாற்றுகிறார் !

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஆறாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 17-ஆம் தேதி ஆண்டிப்பட்டியில் தொடங்கினார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று ஓசூரில் உரையாற்றுகிறார்.

தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

நேரம்	இடம்	கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள்
19.04.2026 (ஞாயிற்றுக் கிழமை)		
மாலை 4 மணி	ஓசூர் (பொதுக்கூட்டம்)	ஓசூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனஹள்ளி, தளி

குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதைத் தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 14.04.2026

தலைமைக் கழகம்,
தி.மு.க.

உங்கள் கனவு நனவாக ஒருபோதும் எங்கள் முதல்வர் அனுமதிக்க மாட்டார்!

'தொகுதி மறுவரையறை' மூலம் மதச்சார்புள்ள அரசை நிறுவ விரும்புவதா?

மக்களவையில் - மசோதா மீதான விவாதத்தில் ஆ.இராசா ஆவேசம்!

புதுடெல்லி, ஏப்.19-

"தொகுதி மறுவரையறை மூலம் மதச்சார்புள்ள அரசை நிறுவ நீங்கள் விரும்புகிறீர்கள்" என்றும், "உங்கள் கனவு நனவாக ஒருபோதும் எங்கள் முதல்வர் அனுமதிக்க மாட்டார்" என்றும் மக்களவையில் தொகுதி மறுவரையறை மசோதா மீதான விவாதத்தில் பேசிய ஆ.இராசா குறிப்பிட்டார்.

மக்களவையில் நேற்று முன்தினம் (ஏப்ரல் 17ந் தேதி) ஆ.ராசா எம்.பி. பேசியதாவது:-

எனது கட்சியைச் சேர்ந்த கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரையில், இந்த அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட இந்த 2 சட்டங்களின் பின்னணியில் உள்ள சந்தேகத்திற்குரிய நடவடிக்கைகள் குறித்து அவர் விளக்கியுள்ளார். எனது உரிமையைப் பயன்படுத்திக் கொள்ள நான் மிகக் குறைந்த நேரத்தையே எடுத்துக்கொள்ள விரும்புகிறேன்.

விபரீதமான அடிப்படையில் நியாயங்களை கற்பிப்பதா?

இந்த விவாதத்தில் பங்கேற்கும் எண்ணம் எனக்கு இருக்கவில்லை, ஆனால் இப்போது ஒரு உறுதியான முடிவை எடுத்துள்ளேன். உள்துறை அமைச்சர் மற்றும் பிரதமரின் உரைகளைக் கேட்ட பிறகு, இந்த அவையில் சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன். இது மிகவும் விசித்திரமாக இருக்கிறது.

பிரதமரின் தலைமையிலான அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு மசோதாக்கள் மேசையில் வைக்கப்பட்டு, அவை பரிசீலனையில் உள்ளன. ஆனால், பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகிய இரண்டு உயர் பதவியில் இருப்பவர்களும், மசோதாவின் உண்மையான சாராம்சத்திலிருந்தும் நோக்கத்திலிருந்தும் முற்றிலும் விலகி, வேறு ஏதோ ஒரு விபரீதமான அடிப்படையில் நியாயங்களைக் கற்பித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இது நாடாளுமன்றத்திற்கு விசித்திரமானது. விசித்திர மானது மட்டுமல்ல, பிரதமர், உள்துறை அமைச்சர் மற்றும் இந்த அரசு இணைந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் அதன் விழுமியங்களையும் சீர்குலைப்பதாக நான் வெளிப்படையாகக் குற்றம் சாட்டுகிறேன். இதை நான் விளக்குகிறேன்.

மாநிலங்கள் சீரமைப்பு குறித்த அச்சம்!

உள்துறை அமைச்சரின் உரையைக் கேட்ட பிறகு, தமிழ்நாடு அல்லது தென்னக மாநிலங்களுக்கு எதுவும் செய்யப்படாது என்பதே எங்களது அச்சமாக இருக்கிறது. அவர் என்ன சொல்கிறார் என்றால், 'தமிழ்நாடு சிக்கலில் தள்ளப்படும் என்று நீங்கள் அஞ்சுகிறீர்கள், ஆனால் சுமார் 50 சதவீத இடங்கள் அதிகரிக்கும்; தமிழ்நாட்டிற்கு எந்த இழப்பும் ஏற்படாது, கேரளாவுக்கு 30 எம்.பி.க்கள் இருப்பார்கள்; தென் மாநிலங்களின் மனதில் இது செயற்கையாக உருவாக்கப்பட்ட அச்சம்' என்கிறார்.

தென் மாநிலங்களின் மனதில் உள்ள இந்த அச்சம் 2010 அல்லது 2011 அல்லது 2026ல் உருவானதல்ல. அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் மனதிலேயே இந்த 'வடக்கு தெற்குப் பிரிவு' குறித்த அச்சம் இருந்தது 'மாநில மறுசீரமைப்பு மசோதாவின்' சட்ட விதிகளின் கீழ்தான் மாநிலங்கள் உருவாக்கப்பட்டன. டாக்டர் அம்பேத்கர் மற்றும் இதர குழு வினரால் மொழிவாரி மாநிலங்களின் அடிப்படையில் மாநிலங்கள் சீரமைக்கப்பட்டன. நான் சொல்வது சரி என்று நினைக்கிறேன். 1956ல் ஒரு சட்டபூர்வ நடவடிக்கையின் மூலம் மொழிவாரி மாநிலங்கள் என்ற போர்வையில் இவை உருவாக்கப்பட்டன.

அம்பேத்கர் எழுதிய புத்தகம்!

இந்த மொழிவாரி மாநிலங்கள்

என்ற கருத்து நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்பட்டபோது, அதற்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பே அம்பேத்கர் ஒரு தெளிவான புத்தகத்தை எழுதினார். அதுதான் இந்தச் சட்டத்திற்கு ஆதாரமாகவும் முதுகெலும்பாகவும் இருந்தது. அந்தப் புத்தகத்தில் அவர் சொல்கிறார், 'வடக்கு மற்றும் தெற்கு என இந்தியா பிரிக்கப்பட்டுள்ளது. வடக்கு இந்தி பேசும் பகுதி, தெற்கு இந்தி பேசாத பகுதி. இந்தி பேசும் மக்கள் தொகையின் அளவு என்னவென்று பலருக்குத் தெரியாது.

இது இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் 48 சதவீதமாகும். இந்த உண்மையை ஒரு கண் கொண்டு பார்த்தால், கமிஷனின் முயற்சி (மாநிலங்களை உருவாக்கும் கமிஷன்) வடக்கை ஒருங்கிணைப்பதற்கும் தெற்கைச் சிதறடிப்பதற்கும் (Balkanization) வழிவகுக்கும் என்று எவராலும் சொல்லாமல் இருக்க முடியாது' என்கிறார்.

அவர் மேலும் கேட்கிறார்: 'தெற்கு மாநிலங்கள் வடக்கின் ஆதிக்கத்தைப் பொறுத்துக் கொள்ளுமா? இந்திய அரசியலமைப்புச் சட்ட வரைவு பரிசீலனையில் இருந்தபோது, இந்தியைத் தேசிய மொழியாக ஏற்றுக்கொள்வது குறித்து காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில் என்ன நடந்தது என்ற ரகசியத்தை நான் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தினால் அது தவறாகாது. விதி 115ஐ விட (குற்போதுள்ள மொழிக்கான விதிகள்) விவாதத்திற்குரிய வேறு எந்த விதியும் அங்கு இருக்கவில்லை. வேறு எந்த விதியும் இவ்வளவு எதிர்ப்பையோ அல்லதுஇவ்வளவுகூடானவிவாதத்தையோ உருவாக்கவில்லை. நீண்ட விவாதத்திற்குப் பிறகு, வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது, இந்திக்கு ஆதரவாக 78 வாக்குகளும், எதிராக 78 வாக்குகளும் கிடைத்தன. சமநிலை (Tie) ஏற்பட்டது. நீண்ட நேரத்திற்குப் பிறகு மீண்டும் வாக்கெடுப்பு நடந்தபோது, இந்திக்கு ஆதரவாக 78, எதிராக 77 என முடிந்தது. ஒரே ஒரு வாக்கினால் இந்தி தேசிய மொழி என்ற இடத்தைப் பிடித்தது. வரைவுக் குழுவின் தலைவர் என்ற முறையில் எனது தனிப்பட்ட அனுபவத்திலிருந்து இந்த உண்மைகளை நான் கூறுகிறேன்' என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெறுப்பு பகையாக வளரக்கூடும்!

இந்த உண்மைகள் தெற்கு மாநிலங்கள் வடக்கை எவ்வளவு தூரம் வெறுக்கின்றன என்பதை வெளிப்படுத்துகின்றன. வடக்கு ஒருங்கிணைந்தும், தெற்கு சிதறுண்டும் இருந்தால், இந்திய அரசியலில் வடக்கு தொடர்ந்து விகிதாச்சாரத்திற்கு அப்பாற்பட்ட செல்வாக்கைச் செலுத்தினால், இந்த வெறுப்பு பகையாக வளரக்கூடும்.

வடக்கினால் தென் மாநிலங்கள் மீது செலுத்த முயலப்படும் இந்த விகிதாச்சார மற்ற ஆதிக்கம் பற்றிச் சொல்வது நானோ அல்லது எனது தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களோ அல்ல; இது குழுவில் டாக்டர் அம்பேத்கர் சொன்ன கூற்று. இப்போது இந்தப் பின்னணியில் உள்துறை அமைச்சரின் பதிலைப் பாருங்கள். அவர் சொல்கிறார், '50 சதவீத உயர்வு இருக்கும், தமிழ்நாடு அல்லது கேரளாவிற்கு எந்தப் பாதிப்பும் இருக்காது' என்கிறார்.

எதற்காக இந்த சட்டங்கள்?

எனது கேள்வி இதுதான்: அப்படியானால் எதற்காக இந்தச் சட்டங்களைக் கொண்டு வருகிறீர்கள்? 'கவலைப்படாதீர்கள், நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன்' என்று உள்துறை அமைச்சர் அவையில் சொல்கிறார் என்றால், பிறகு இந்த இரண்டு மசோதாக்களின் நோக்கம் என்ன? இந்த இரண்டு மசோதாக்களும் என்ன சொல்கின்றன?

இந்தப் பிரிவுகள் மிக முக்கியமானவை. மசோதாவில் உள்ள பிரிவு 8, சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பையே அடிப்படையாகக் கொள்கிறது. ஆனால் அரசியலமைப்புச் சட்டம் என்ன சொல்கிறது? அரசியலமைப்புச் சட்டத்தின் விதி 81, பிரிவு 2ன் படி, இடங்களின் எண்ணிக்கை என்பது மக்கள் தொகைக்கும் அந்த இடங்களுக்கும் இடையிலான விகிதாச்சாரம் அனைத்து மாநிலங்களுக்கும் நடைமுறைக்குச் சாத்தியமான வரையில் சமமாக இருக்க வேண்டும் என்கிறது. 'விகிதாச்சாரம்' (Ratio) என்ற வார்த்தை மிக முக்கியமானது.

மொழிவாரி மாநிலங்களை உருவாக்கியபோது, அம்பேத்கர் மற்றும் ஜி.பி. பந்த் போன்ற உறுப்பினர்கள் மிகவும் தெளிவாக இருந்தார்கள். நாம் 'ஒரு மாநிலம், ஒரு மொழி' என்று உருவாக்கும்போது, அந்த ஒரு மொழியைப் பேசும், ஒரே கலாச்சாரத்தைப் பின்பற்றும் ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் மொழி, நாகரிகம், பண்பாடு மற்றும் அனைத்து இன விழுமியங்களும் அந்தச் சட்டமன்றத்தில் பிரதிபலிக்க வேண்டும் என்பதே அதன் காரணம். அனைத்துச் சட்டங்களின் தொகுப்பும், உருவாக்கப்படப்போகும் விதிகளும் அந்த மாநில மக்களைப் பிரதிபலிக்க வேண்டும், ஏனெனில் அவர்கள் அந்த ஒரு மொழியை ஏற்றுக்கொண்டுள்ளனர். இது மாநிலங்களின் தொகுப்பாக இருக்கும்போது, அரசாங்கத்தின் தரப்பில் அனைத்து இடர்ப்பாடுகளையும் ஏற்பது நியாயமானதல்லவா...!

தவறாக வழிநடத்துவது விசித்திரமானது!

ஆனால், மறுபுறம் பிரதமரும் உள்துறை அமைச்சரும் சொல்கிறார்கள், "கவலைப்படாதீர்கள், எதுவும் நடக்காது" என்று. ஆனால் மற்றொரு பக்கம், அரசியலமைப்பு உங்களுக்கு எதிராக இருக்கிறது. தற்போதைய மசோதா உங்களுக்கு எதிராக உள்ளது. இந்த நாட்டின் முதல் மற்றும் இரண்டாம் இடத்தில் இருப்பவர்கள் (பிரதமர் மற்றும் உள்துறை அமைச்சர்), எந்தக் காரணமும் இல்லாமல் தவறான தரவுகளைக் கொண்டு நாடாளுமன்றத்தை முற்றிலும் தவறாக வழிநடத்துவது மிகவும் விசித்திரமானது.

பெண்களின் உரிமை என்ற பெயரில், தாங்கள் பெண்களின் உரிமையைப் பயிற்சி செய்ய விரும்புவதாகப் பிரதமர் சொல்ல நினைக்கிறார். யாராவது இந்த மசோதாவை எதிர்த்தால், அவர்கள் பெண்களுக்கு எதிரானவர்கள் என்று சித்திரிக்கப்படுவார்கள். பெண்களின் உரிமை என்ற பெயரில், அரசாங்கம் மாநிலங்களுக்கு இடையே பாகுபாட்டை ஊக்குவிக்கப் போகிறது. இந்தப் பாகுபாட்டின் மூலம், நீங்கள் தெற்கு - வடக்குப் பிரிவினையை ஊக்குவிக்க விரும்புகிறீர்கள்.

இந்தப் பிரிவினையின் மூலம், நீங்கள் மத்தியில் ஒரு நிரந்தர ஆட்சியைப் பெற விரும்புகிறீர்கள். அந்த நிரந்தர அதிகாரத்தின் மூலம், நீங்கள் ஒரு மதச்சார்புள்ள (theocratic) அரசை நிறுவ விரும்புகிறீர்கள். அந்த அரசின் மூலம், நீங்கள் ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்பதைத் திணிக்க விரும்புகிறீர்கள். உங்கள் கனவு நனவாக நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். எங்களது மாநிலமும், எங்களது முதலமைச்சரும் தமிழ்நாட்டிற்குள் இதை அனுமதிக்க மாட்டார்கள். நாங்கள் இதனை கடுமையாக எதிர்ப்போம்."

இவ்வாறு ஆ.இராசா எம்.பி. குறிப்பிட்டார்.